வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 36/2020

வழக்கு சாட்சி PW7

| பெயர் | விஜயன், சிறப்பு உதவி ஆய்வாளர், எம்3 புழல் காவல் நிலையம் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | செங்கல்வராயன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 52 |

தேதி 11.08.2026.

எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

நான் தற்போது புழல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் திருமதி. பிரதிபா அவர்கள் பணி மாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்புகளை கையாளுவதின் அடிப்படையில் கால விரயம் கருதி சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 08.03.2019 மாலை 6 மணிக்கு எம்3 புழல் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பிரதிபா பணிபுரிந்து வந்தபோது திரு. திவாகர் என்பவர் நிலையம் ஆஜராகி அளித்த புகாரினை பெற்று எம்3 புழல் காவல் நிலைய குற்ற எண். 78/2019 ஆக இ.த.ச.பிரிவுகள் 457, 380 கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தார். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் எதிரிகளை தேடிவந்த நிலையில் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் திவாகர், முருகன், மகேஷ் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். போஸ், இசக்கிமுத்து முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ3 ஆகவும், மாதிரி வரைபடமானது அ.,த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் எம்4 ரெட்டில்ஸ் காவல் நிலைய குற்ற எண் 138/2019 இதச 341, 294(b), 394, 397, 506(2) என்ற வழக்கில் கைது செய்யப்பட்டு அவ்வழக்கில் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 10.04.2019 அன்று எதிரிகளை பிடி ஆணை மூலம் கைது செய்தார். பின்னர் எதிரிகளை இவ்வழக்கில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்னர் எதிரிகள் நீதிமன்றத்தில் பிணையம் பெற்று இந்நாள் வரை பிணையில் இருந்து வருகிறார்கள். எம்4 ரெட்டில்ஸ் காவல் நிலைய ஆய்வாளர் சான்றிட்டு ஒப்புதல் வாக்குமூலங்களை பெற்று அவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் வெங்கடேசன், தசரதன் ஆகியோர்களின் சான்றிட்ட 161 வாக்குமூலங்களையும் பெற்றுள்ளார். பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை**

ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி வழக்கினை சரியான முறையில் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**